### முழுமையாக மழைநீர் அகற்றப்படும் வரையில்

# தொய்வின்றிக் களப்பணியைத் தொடர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 18 -**

**“முழுமையாக மழை நீர் அகற்றப்படும் வரையில் தொய்வின்றிக் களப் பணியைத் தொடர்வோம்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறியுள்ளார்.**

கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கனமழை குறித்த ‘அலெர்ட்’ பெறப்பட்டவுடன் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, பொதுமக்களின் ஒத்துழைப்போடு எதிர்கொண்டோம்.

பெரும்பாலான இடங்களின் மழைநீர் தேங்காமல் சரிசெய்யப்பட்டுள்ளது.

முழுமையாக மழைநீர் அகற்றப்படும் வரையில் தொய்வின்றிக் களப்பணியைத் தொடர்ந்திடுவோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### பஞ்சாப் மாநில முதலமைச்சர்

# பகவந்த்மான் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களின் பிறந்த நாளையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

**தாங்கள் நல்ல உடல்நலத்துடனும், வலிவுடனும், எடுத்த செயலில் எல்லாம் வெற்றியுடனும் திகழ விழைகிறேன்.**



இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் **‘என் உயிரினும் மேலான..!’** பேச்சுப் போட்டி மாவட்ட மற்றும் மண்டல அளவில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது.

மாநில அளவிலான இறுதிப்போட்டி 19.10.2024 அன்றும், பரிசளிப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 20.10.2024 அன்றும் சென்னையில் நடைபெறும் என்று அறிவித்திருந்தோம்.

தமிழ்நாடு முழுவதும் கனமழை பெய்துள்ள சூழலில், போட்டியாளர்களின் நலன் கருதி, இரு நிகழ்ச்சிகளையும் ஒத்தி வைத்துள்ளோம். மாநில அளவிலான இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**அன்பகம்,**
சென்னை – 18.
நாள் : 17–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### தேங்கிய தண்ணீர்! துரித நடவடிக்கையால் ஒரே இரவில் அகற்றம்!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## பள்ளிக்கரணையில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பொதுமக்கள் ஒன்றுதிரண்டு பாராட்டு!

**சென்னை, அக். 18 -**

**தமிழ்நாடு அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக 2008ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போது தான் மழைநீர் தேங்காமல் சென்றது! ஆய்வுப் பணியின்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பொதுமக்கள் நேரடியாக ஒன்று திரண்டு பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) 2ஆம் நாளாக கிண்டி ரேஸ் கோர்ஸ், வேளச்சேரி, பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் நேரிடையாக பார்வையிட்டு, மேற்கொள்ளப்படும் மழைவெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தார்.

அப்போது, பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரிப் பகுதியில் பொதுமக்கள் ஒன்று திரண்டு முதலமைச்சர் அவர்களிடம், “ துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.6.2024 அன்று நள்ளிரவில் பள்ளிக்கரணை பகுதியில் ஆய்வு செய்து மழைநீர் தேங்காமல் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும் அப்பணி நடைபெறும் போது மறுபடியும் நேரிடையாகச் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார். அதன் விளைவாக இப்பகுதியில் நேற்று முன்தினம் பெய்த கன மழையின்போதும், 2008ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்போது தான் மழைநீர் எங்கும் தேங்காமல் சென்றது. துரிதமான நடவடிக்கையினை ஒரே இரவில் மேற்கொண்ட மைக்காக இப்பகுதி மக்களின் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதாக கூறினர்”.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

# பருப்பும் பாமாயிலும் - தீபாவளிக்கு தங்கு தடையின்றி வழங்க நடவடிக்கை!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

*சென்னை, அக். 18-*

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பருப்பும், பாமாயிலும் தீபாவளிக்குத் தங்கு தடையின்றி வழங்கப்படும் என்று மீண்டும் வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

துவரம் பருப்பு விநியோகம் தொடர்பாக ஒரு நாளிதழில் வந்த தவறான செய்திக்கு ஏற்கனவே துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தீபாவளிக்குத் தட்டுப்பாடின்றி வழங்கப்படும் என்று 14/10/24 அன்று அறிக்கை வெளியிட்டுள்ளேன்.

கோயம்புத்தூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் என்னுடைய அறிக்கையைப் படிக்காமல் பருப்பு விநியோகம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளிட்டுள்ளார். அவரின் பார்வைக்கு என்னுடைய அறிக்கையை அனுப்பியுள்ளேன்.



அக்டோபர் மாதத் துவரம் பருப்பு ஒதுக்கீடான 20751 மெட்ரிக் டன்னில் நேற்று முன்தினம் (15.10.2024) வரை 9461 மெட்ரிக் டன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது; 20408000 பாமாயில் பாக்கெட்கள் ஒதுக்கீட்டில் 9783000 பாக்கெட்கள் விநியோகப்பட்டு விட்டன. மீதி விரைவாக விநியோகிக்கப்ப ட்டு வருகின்றன. ஆதலால் தீபாவளிக்கு எவ்விதத் தட்டுப்பாடுமின்றி துவரம் பருப்பும், பாமாயிலும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறுஅவர் தெரிவித்துள்ளார்.

### ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் தலைமையில் – உத்திரமேரூர் தொகுதி

# களியாம்பூண்டி ஊராட்சியில் 25 இருளர் குடும்பங்களுக்கு நல உதவிகள் - உணவு!

## அமைச்சர் ஆர்.காந்தி – க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினர்! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

*காஞ்சிபுரம், அக். 18 -*

காஞ்சிபுரம் மாவட்டம் - உத்திரமேரூர் ஒன்றியத்தில் மழையால் பாதிக்கப்பட்ட இருளர் குடும்பங்களை சந்தித்து நிவாரணப் பொருட்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஆகியோர் ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன் தலைமையில் வழங்கினர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள களியாம்பூண்டி ஊராட்சியில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட 25 இருளர் குடும்பங்கள் அந்த பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டிடத்தில் அரசுத்துறை அதிகாரிகள் தங்க வைக்கப்பட்டு உணவு வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் உத்திரமேரூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் பாய், பெட்ஷீட், பிரட், பிஸ்கட் ஆகியவை வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (16.10.2024) காலை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம் எல் ஏ தலைமையில் நடைபெற்றது.

அதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இருளர் குடும்பங்களை சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து நிவாரண பொருட்களை வழங்கி மதிய உணவு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து சில தினங்களுக்கு முன்பு மின்சாரம் தாக்கி இறந்தவரின் குடும்பத்திற்கு நான்கு லட்சம் காசோலையினை வழங்கினார்.



வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட தாமரைகுளம், கட்டபொம்மன் நகர், பாண்டியன் நகர் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சி. பழனி, நகராட்சி துறை அதிகாரிகளுடன் ஆலோசித்தார். மேலும் மழைநீர் தேங்கும் இடங்களில் போர்க்கால நடவடிக்கைகள் மேற்கொண்டு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், நகராட்சி ஆணையர் வீர முத்துக்குமரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா சக்கரை, ஒன்றியச் செயலாளர் தே.முருகவேல், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி சார்பில் கே.வி.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பார்வையாளர் அறிமுக கூட்டத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். நிகழ்வுகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கழக தீர்மானக்குழு துணை தலைவர் அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சுப.திவாகரன், மாவட்டத் துணைச் செயலாளர் ஞான.இளங்கோவன், அடைக்கலம், மாவட்ட பொருளாளர் அபுதாஹீர், தீர்மான குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன், அறந்தாங்கி நகர கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், அறந்தாங்க நகர தலைவர் இரா.ஆனந்த, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் வீரய்யா, த.மணிராஜன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் உதயம் சண்முகம், பொன்.கணேசன், வே. பொன்துரை, சக்தி ராமசாமி, எஸ்.எம்.சீனியார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.